அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

- page. No. 485 -

மலர் 2	விக்ருதி ௵ பங்குனி மீ	விலை
இதழ் 12	மார்ச்சு—ஏப்ரல்—1951 ௵	அணா 2½

- Acc. No. 18580.



தன் சேனைகள் இறந்துவிட்டதால், சூரபத்மன் தளர்ந்து,
வலிமையின்றி முன்போல் தனித்தவனாகி நின்றான்.

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—22)

486

பொருளடக்கம்

			பக்கம்
1.	அடையாளக்காரன்	(திருப்புகழ்மணி)	... 1
2.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வேங்கடராமன்)	... 5
3.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 10
4.	திருக்கழுக்குன்றத்தின் மாட்சி	(இளவழகனர்)	... 20
5.	ஆறுமுகமான பொருள்-4	(சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,)	... 26
6.	அருட் செல்வமும் பொருட் செல்வமும்	(அ. ராமமூர்த்தி)	... 30
7.	முருகன் வாழ்வு	(புலவர் அரசு)	... 35
8.	The Day		... 36

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் நேரில் அல்லது மணி ஆர்டர் மூலம் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0 அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

இவ்விரண்டாவது வருட சந்தா வருகிற பங்குனி மாதத்துடன் முடிந்துபோகிறபடியால், சித்திரை முதல் தொடர்ந்து பத்திரிகையை விரும்புவோர்கள் பங்குனி மாதம் முடிவதற்குள் சந்தா தொகையைச் செலுத்தவும். சந்தாத் தொகை சேராதவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS—1

Sole Distributors of :— **EVEREST BRAND STATIONERY & CARBON PAP**

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ஹு பங்குனி மீ மார்ச்சு—ஏப்ரல்—1951	இதழ் 12

அடையாளக்காரன்

(திருப்புகழ்மணி)

"ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு
ணைபுரியி னிற்கு மடை யாளக் காரனும்"

புராணங்களிலே, வேத ஆகமங்களிலே, தெய்வத்தின் ரூபங்கள் பற்பலவாய் போற்றப் படுகின்றன. தெய்வம் ஒன்றுதான். தெய்வத்தின் பண்பு உபநிடதங்களிலும் இதிகாசங்களிலும் பக்தர் புராணங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. தெய்வம் எங்கும் நிறைந்திருக்கும் தத்வமாதலால், தெய்வத்தின் அடையாளங்கள் எவையென்று தெரிந்தாலன்றி தெய்வத்தைக் கண்டுகொள்ள முடியாது. தெய்வத்தின் இயல்பைத் திருப்புகழில் கூறுவார் அருணகிரி. ஊனக்கண்களால் பார்க்க

பிறவிதோறு மெனைநலியாத படியுன தாள்கள் அருள்வாயே
முறைமையாக நின்அடிகள் மேலவே முனிவு தீரவந்து அருள்வாயே

முடியாதது. ஆகிலும் காண்கின்ற ரூபங்களில் உறைகின்றார். உருவமற்ற அரூபமும் அவரேயாகின்றார். பேச்சினால் பேசிஉணர்த்த முடியாத பொருள். வாசாம கோசரமாய் இருந்தாலும் வாக்கை அளிக்கின்றார். வேதாந்தப் பொருளும் தொடரொணாதது. தேகத்தில் வசிப்பவர்; ஆனால் உயிர் உடல் அறியமாட்டாத நுட்பமான வஸ்து. பேத அபேதமொடு உலகாய் வளர்கின்றார். துரியாதீதமாய் அமரும் பொருள். பிந்துநாதமாய் முனிவர்கள் அறிந்ததும் அதுவே. எங்கும் அருள் நிறைவாய் வளர்வதுதான் தெய்வம். அது ஒன்று. அதுதான் ஸ்ரீ முருகா என்றார் அருணகிரி. இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் எட்டா தத்துவத்தை நாம் எப்படித்தான் நாடுவது. எப்படித்தான் தெரிந்து கொள்வது? அதற்காகவே தெய்வத்தின் கருணை ஓர் உருவு எடுத்து, தன்னைத் தொண்டருக்கு ஓர் அடையாள உருவாய் காட்டிக் கொடுக்கின்றார். ஆனால் இந்த உருக்காட்சிதானே அவர் என்றால் தெய்வத்தின் ஓர் அடையாளம்தான் முருகன் எனும் காக்ஷி. அடையாளத்தால்மூலப்பொருளைத் தெரிந்து கொண்டவனுக்கு அடையாளமும் மூலப்பொருளும் ஒன்றாய் விடும். (The symbol and the thing symbolised become one. He is lord Muruga)

ராமர் அடையாளமாகக் கணையாழி மோதிரத்தைக் கண்டாள் சீதை. ராமனையே கண்டாள் போலும். தெய்வத்தைத் தெரிந்துகொள்ள

தவக்கடல் குளித்து இங்கு உனக்கடிமையுற்று
உன் தலத்தினில் இருக்கும்படி பாராய்.

முருகன் ஓர் அடையாளக்காரன். நெற்றி ஆகாசம். இரண்டு விழிகளும் சந்திர சூரியர்கள். நாசி அரும் பெரும் கோபுரம். கோபுர உச்சியில் ஓர் அரும் பெரும் ஜோதி விளக்கு எரிந்து கொண்டே இருக்கின்றது. இடா, பிங்களா எனும் நாடிகள், இரு புருவங்களுக்கு இடையிலே சுஷும்னாஸ்தானத்தில் சேர்ந்து ஜோதியாய் ஒளிர்கின்றதாம். அந்த ஜோதியில் விளங்குகின்றார் ப்ரம்மம் எனும் முருகன். பொன்னம்பலமாகக் கருதப்படுவதால் ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணாபுரியெனும் சுஷும்னாவில் நிற்பவர் முருகன் - ப்ரம்மத்தின் அடையாளக் காரர்—என்றார். முருகன் அடையாளங்களை நன்கு உணரில், ப்ரம்மம் என்ற ஏகதெய்வத்தை உணர்ந்து விடலாம். இந்தப்பொன் கோபுர உச்சியில் விளங்கும் தீபவிளக்கு ஒவ்வொரு ஜீவராசியின் அங்கத்துக்குள்ளும் கொழுந்துவிட்டு மிளிர்கின்றது. ப்ரம்மத்தின் லக்ஷணங்கள் என்னவென்றறிய வேண்டுமாயின் முருகன் அடையாளங்களைக் கவனித்தால் போதும்.

விளங்கும் சுடர்ப் பொறிகளாய் அவதரித்தான் முருகன். அடியார் அறிவில் சுடர் ஒளி ஞானமாய் உதிக்கின்றான் போலும். குளிர்ந்த கங்கையில் ஆறுமுகக்குழவியாய்த்தவழ்ந்தான். பரத்தில் பஞ்சபூதச் சேர்க்கையால் தேகம்கொண்ட தொண்டர் உள்ளத்தில் ஆறுமுகப்பெருமானாய் குளிர்ச்சி மிகுந்த கருணைவாரிதியாய் திகழ்கின்றான். இச்சாக்

இனிவிட வேதாந்த பரமசுக வீடாம் பொருள்
இதவிய பாதாம் புயம் அருள்வாயே.

ரியா ஞானசக்தி சொருபனாய்ப் படர்ந்தான். தொண்டருக்குத் தோன்றாத் துணையாகி வினைகெடுத்து, ஆணவாதிகளை மாய்த்து, அன்புபெருக்கை இதயத்தில் நிர்மித்து முக்தியெனும் தன் சரணாரவிந்தத்தை அளிக்கின்றான். நமது அஞ்ஞானத்தை எல்லாம் அடையாளம் காட்டி ஒழித்து அறிவித்து வள்ளியை ஆண்டதுபோல் நம்மை ஈடேற்றுகின்றான். கச்சியப்பர் அடையாளங்களைக் குறிக்கின்றார்.

வேதக் காக்ஷிக்கும் உபநிஷத் உச்சியின் விரிந்த
போதக் காக்ஷிக்கும் காணலன்
புதியரிற் புதியன் மூதக்கார்க்கு மூதக்கவன்
ஆதிக்காதியாய் உயிருக்குயிராய் நின்ற அமலன்

திருப்புகழில் அருணகிரியார் விளக்கும் அடையாளங்களைப் போற்றும் தொண்டருக்கு உண்மை ஞானம் எளிதில் கைகூடும். முருகனை நாடில் ஓங்கார மெனும் ஆடுகின்றமயில் ஒரு அடையாளம். முருகன் ஓங்காரப் பொருள் என்பதைக் காட்டுகின்றது. கையில் வேல். மனம் அன்பால் விரிந்து தாழ்மையாய் சரணார விந்தத்தில் குவிந்தல் ரூபமே வேல். தாழவைத்து வாழவைப் போன் முருகன். ஓங்காரத்தைச் சுற்றிக்கொண்டு அதன் லக்ஷணமாக நிற்பதும் மயில். தன்மூக்கால் தூக்கி விளையாடுவதும் வாசுகி எனும் பாம்பு. சக்தி கலந்த ஓங்காரம். சக்தியை அடக்கியாளும் முருகன் வேள்வி அந்தணர்களையும், பக்தி நிறைந்த மக்கள் யாரேனும் அவர்களையும் ஆதரித்து வீடளிக்கின்

அறிவே யழிந்து அறிவாகி நைந்து
அடியேன் மயங்கி விடலாமோ.

னான். முருகன் ஓர் குறியிடம், ப்ரம்மத்தின் குறியிடம். சம்சார சமுத்திரத்தில் மனம் எனும் கப்பலோட்டும் மாலுமிகளாகிய ஜீவர்களுக்கு முருகன் ஓர் Light house (லைட் ஹவுஸ்) கலங்கரை விளக்கம். முக்தி துறைமுகம் காட்டும் அடையாளக்காரன்.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

20—ஆம் பை

V. S. வேங்கடராமன்

" அபயந் தருகிறேன் " என்பது
அவன் சொல்லன்றோ ?

கண்ணன் கன்றுகளைத் தேடப்போன இடத்தில் அவற்றைக் காணவில்லை, மீண்டார். மணற்குன்றுத் திடரில் அக் கன்று மேய்க்கும் தோழரையும் காணாது-இரண்டையுந் தேடலானார். எங்குமிரண்டும் காணாது போகவே எல்லாம் அப்பிரமன் வேலைகள் என்று விரைவில் உணர்ந்தார். தாய்ப் பசுக்கட்கும், தோழரின் தாய்மாருக்கும், பிரமனுக்கும், தன் செய்கையால் இன்பமுண்டாக்கத் தானே பல கன்றுகளாகவும், தானே அத் தோழர்களாகவும் இரண்டு வகை வடிவங்களாகப் பல எடுத்துக் கொண்டார்.

" ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் "

எத்தனை கன்றுகள் ஆனானோ அம்மாயன்! எத்தனை தோழர் ஆனானோ! எத்தனை தடி, எத்தனை கொம்பு, எத்தனை குழல், எத்தனை இலையூதல், எத்தனை உரி, வன்னம் வன்ன

மெய்வீடு பரம சுகசிந்து இந்திரிய
தாபசபல மறவந்து நின்கழல் பெறுவேனோ.

மான எத்தனை ஆடை அணிகலன்கள், எத்தனை ஒழுக்கங்கள், எத்தனை குணங்கள், பெயர்கள், வடிவங்கள், வயசுகள் விளையாட்டுக்கள் அத்தனையும் அனைத்துமானான் கண்ணன் ஒருவனே! "எல்லாம் அவன்" என்ற மறை கண்ணெதிரானது.

"அவன் ஒருவனே பலவுஞ் செய்வன்"

அந்த அந்தக் கன்றுகளைத் தனித்தனியே ஓட்டினான். அவ்வக் கொட்டில்களில் நுழைந்து அவற்றை அடைத்தான். அவ்வத் தோழராய் அவ்வவ் வீடுகளில் நுழைந்தான் அவ்வக் கோபிகைத் தாய்மார்களின் பாலு முண்டார். அவ்வளவு தாய்மாருக்கும் கதைகளைச் சொன்னார். அவ்வளவு தாய்மாராலும், நீராட்டப்பெற்றும், அழகு செயப்பெற்றும், அமுதூட்டப்பெற்றும் பாராட்டப் பெற்றார். அப்பசுக்கள் அவ்வளவு ஆர்வத்துடன் கன்றுகட்குப் பால் ஊட்டின. கோகுலம் முழுவதும் அன்பு மேலிட்டது. ஸர்வாத்மப் பிரேமையுடம்பு கொண்டவனல்லவோ அக் கண்ணன்? அப் பசுக்களது அன்பும் அக்கோபிகையர் அன்பும், ஓராண்டுவரையும் அளவேயில்லாமல் வளர்ந்தது. அக் கண்ணனுக்குக் காட்டிலும் விளையாட்டுத்தான்; வீட்டிலும் விளையாட்டுத்தான்.

அண்ணனுக்குக் காட்டிய அரிய அற்புதம்

பெரிய இடையர்கள் பசுக்களைக் கோவர்த்தன மலையில் மேய்க்கும்போது அப் பசுக்கள் நெடுந் தூரத்தில் கோகுலத்தில் மேய்ந்த அக் கன்றுகளைக் கண்டதும், அவ்வளவு வேகமாய் வந்து அக் கன்றுகட்குப் பால் ஊட்டின.

ஜேபதப தேசித்தார வார பரீபுர
பாதத் தாளுமாது திருவுவ நீணயாதோ.

கோபாலர்களுக்குத் தம் மக்களைக் கண்டதும் அளவுக்கு மிக ஆநந்தம் பொங்கியது.

பலராமன், பாலுண்ண மறந்த கன்றுகளிடத்திலுங் கூட இப் பசுக்களுக்குப் பிரேமை இவ்விதம் வளர்கிறதே என்று பார்த்து வியந்தார். எனக்கும் அல்லவோ என்றுமுண்டாகாத அன்பு இக் குழந்தைகளிடம் விருத்தியடைகிறது என்று நினைத்து, எல்லாம் கண்ணனே எனத் தெளிந்து தன் அறிவுக்கண்ணால் பார்க்க, அனைவரும் அவ்வளவு கன்றுகளும் கண்ணனேயாம் என்ற முடிவுக்கு வந்தார் ஏ அனந்தரூபனே! எப்படி நீர் எல்லாமாய் அல்லவுமாய் இருக்கிறீர்? என்று கண்ணனைக் கேட்டார். கண்ணன் தன் முகக்குறியால், பலவென்றுரைக்கிற்பலவே யாம், என்று காணச்செய்தார். பிறகு பலராமரும் உணர்ந்துகொண்டார்.

பிரமனும், சத்தியலோகமடைந்தார். தன் வாசல்காவலரால் அவமதிக்கப்பட்டார். அங்கிருந்து திரும்பினார். வந்து பார்த்தார். தன் கடிகாரத்தில் த்ருடி என்னும் கால் நொடி நேரமேயாகியிருந்தது. முன்போலவே ஒரு வருஷம் முடியப் பரிவாரங்களோடு விளையாடுகின்ற கண்ணனைக் கண்டார். கோகுலத்தில் உள்ள கன்றுகளும் சிறுவரும் எல்லாமும் எல்லோருமே என் மாயைப் படுக்கையிலே குறட்டைவிடுகின்றன. கும்பகர்ணராகியுள்ளார்.

கோடி கோடி உலகு அண்டம்,
கோவிந்தன் திருமேனி

இவர் யார்? இவை யாவை? இங்கும் அங்கும் காணப்படுகிறவர் எங்கிருப்பவர்? இவை எங்கிருந்தடா வந்தன?

ஒருஇசை கருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

இந்தக் கண்ணனோடே இக் கன்றுகளும் இக் கோபால பாலரும் வருடம் முடிய விளையாடக் காண்கிறோமே! நம் யோசனைக்கு இது எட்டாததுவே. உண்மைக் கன்றுகள் இவையா, அவையா? உண்மைக் குழந்தைகள் இவர்களா, அவர்களா? என்று பிரமனும் தனது மாயையினால் தானே மயக்கம் அடைந்தார். பகலொளி கண்ணனொளி, பிரமனது ஒளி மின்மினி ஒளிதானே? கண்ணன் மாயையில் பிரமன் மாயை அழுந்தி மறைந்தது.

பிரமனுக்கு நின்றதெல்லாம் நெடுமால்

கன்றுகளும் பாலரும், பிரமன் கண்களுக்குக் கார்முகில்வண்ண மேனியும், பொன்னுடைஅரையும், நான்கு கைகளும், சங்குசக்கர கதைத்தாமரை மலர்களேந்தினதும், கிரீடம், குண்டலம், முத்துமாலை, வனமாலை, ஸ்ரீவத்ஸம், நாகவொத்து, வங்கி, கைக்கொலுசு, காப்பு, பாதசரம், காப்பு அரை நாண், மோதிரம், துளசிமாலை எனுமிவையணிந்த பரம் பொருளாகத் தோன்றின. தோன்றவே நின்றனர்

நான்கு தலைப் பொம்மை

தன்னைப்போல் நின்ற ஒரு பிரமன்முதல் ஸ்தம்பப் பூச்சிவரை யாரும் யாவும் தொழுங்கோலத்தை என்னென்பேன். நீயே அட்டமாசித்தியானாய்! நீயே மாயை, அவித்யை, ஸ்ரீ கீர்த்தி, புஷ்டி, சாந்தி முதலாம் விபூதிகளுமானாய். நீயே இருபத்துநான்கு தத்துவங்களுமானாய்! காலம், ஸ்வபாகம், ஸம்ஸ்காரம், காமம், கர்மம், ஸத்வாதி குணங்கள், உண்மை, அறிவு, அனந்தானந்தம், ஏகரஸம், ஏகரூபம், ஆத்ம ஞானிகட்கெட்டாத மஹிமை, பிரமம்,

---

இன்பு அடியரோ டொருவழி படஇரு
தமர பரிபுர சரணமு மவுனமும் அருள்வாயே.

எல்லாமும் ஆனாய், என்று தோத்திரங்கள் பல செய்தார். கண்டார். கண்ணன்றன் பேரொளியால் காணவும் வலிமையிழந்தார். நான்கு தலைப் பொம்மையென அசைவற்று நின்றார். சரசுவதியின் பதியாயிருந்தும், ஊகித்துணர வலிமையிழந்தார்.

கண்ணனது மாயைத்திரை விலகல்

பிரமனைத் தத்தளிக்க அடித்தது போதுமென்று பிரபு தன் மாயைத்திரையை விலக்கப் பிரமன், உயிர்வரப் பெற்று மெள்ளக் கண்களைத் திறந்துகொண்டு சுற்றிலும் பார்த்தார். எதிரில் அந்தக் கண்ணன் பிருந்தாவனத்தில் காட்சிதரக் கண்டு மகிழ்ந்தார். முன்போலவே, கன்று களையும் தோழர்களையும், சுற்றிலும் கையில் சோற்றை வைத்துக்கொண்டே கண்ணன் தேடுகிறதுபோலவே கண்டார். சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். உச்சிமேற் கரங்கள் குவித்தார். நடுங்கினார் நான்முகனார்.

"ஜய ஜய கோகுல பால"

என்று துதித்தார். தன்பிழை பொருத்தருள வேண்டினார். தேவதேவா! உமக்கு நமஸ்காரம் என்றார். உமது லீலைகளை எவன் அறிவான்? அப் பசுக்களும் அந்த கோபிகைகளும் பாக்யஞ்செய்த ஆத்மாக்கள். அந்த ஆயர் பிறவியோ அக்கன்று பிறவியோ, இரண்டில் ஒன்று எனக் கிந்தக் கோகுலத்தில் கிடைக்கவேண்டும் என்று வேண்டினார். விடைபெற்றார். சத்யலோகம் சென்றார். சதானந்தரான பிரமர்.

இப்பால் கண்ணன், காட்டிலிருந்து கன்றுகளைத் தான் தோழரோடு சாப்பிடத் தொடங்கிய மணல்திட்டுக்கு

அவசமுடன்மல ரடிதொழுது உருகிய பெருமானே
மவுன சிவசுக சலதியில் முழுகுவது ஒருநாளே.

ஓட்டிவந்தார். ஒரு வருஷம் கழிந்ததை அரைநொடியாக, அக் குழந்தைகள் கண்ணனது மாயையால் நினைத்துக் கொண்டன. எவ்வளவு சீக்கிரமாகக் கன்றுகளை ஓட்டி வந்துவிட்டாய்! இங்கு வா கண்ணா! நாம் சாப்பிடலாம் என்று அழைத்தன.

கண்ணன் சிரித்துக்கொண்டே அப்பாங்கர்களோடு சாப்பிட்டு முடித்து அந்த அகாசுர மலைப் பாம்பின் தோலைக் காண்பித்துக்கொண்டு காட்டிலிருந்து கோகுலத் திற்குத் திரும்பிவந்தார். இவ்விதமாகக் கண்ணன் பல லீலைகளைக் காட்டிக்கொண்டே ஐந்தாவது வயதைக் கோகுலத்திற்கழித்தார்.

(தொடரும்)

கந்தர் கலிவெண்பா

(I ச ப தி)

வழி உருவம்

ஆணவம் ஒரு மாயம். அதன் செயல் அழி நடனம். அதன் தொடர்பு, ஆன்மாவிற்கு என்றும் உண்டு. அதனால், கருக்குழியி லிருந்து பிறத்தல்; பதியை மறத்தல்; அன்பைத் துறத்தல்; வினையின் வருந்தல்; புதைகுழி நோக்கிப் போதல்; இங்ஙனம் மண்ணுகின்றது மனித வாழ்வு.

ஆடு, கரும்பின் சுவையை அறிந்ததில்லை. பார்வை யிலாதான், பகலருமையைப் பார்த்ததில்லை. அதுபோல் ஆணவ உறவினன், சிவத்தை அறிவதில்லை.

அருணைநகர்மிசை கருணையொ டருளிய
பரம வொருவசெ ழுமிரு சரணமு மறவேனே.

ஆணவம், மறைப்பை அளித்தது. அதன் ஆற்றல் பல. அதனால், மறைப்பும் பல்வேறு வகைப்படும். மறைப்புண்ட உயிர்களின் மலநோய் அகற்ற, உளம் கொள்கின்றான் உமை குமரன்.

அறிவுப் படலம்

நூற்களைக் கற்றதனால் பெற்ற அறிவும், உலகியல் ஆராய்ச்சியும், பாசஞானம்; முனைப்புடன், அதிகமாகத் தன்னை மதிக்கும் ஞானம், ஆன்ம ஞானம்; தடிப்பேற்றித் தடுமாறவைக்கும் இவைகளின் மேம்பட்ட ஞானம், விஞ்ஞானம்.

இன்றைய தினசரிகள் பறைசாற்றும் விஞ்ஞானம், பூத பௌதிக ஆராய்ச்சிச் செய்திகள்; அது வேறு. பழைய நூற்கள் குறிப்பிடும் விஞ்ஞானம், சமய சம்பந்தமான ஞானம்; அது, அடிஞானம், அருள் ஞானம், பரஞானம், பதி ஞானம், சிவ ஞானம் என்றெல்லாம் பெயர் பெறும். இந்த ஞானம் பெற்றவர் சீவன் முத்தர், சாமுசித்தர்கள்.

ஒருமல உயிர்கள்

ஆணவம் அகலும்; அதற்குரிய பக்குவம் அமையும்; அந்த நிலையில் உள்ள ஆன்மாக்கள் சிலர். அவர்கள் அறிவுள் அறிவாய், அறுமுகப் பரமன் அமர்தல் வேண்டும்; ஆணவம் அகல, சிவ ஞானத்தை அருளல் வேண்டும்; உயர் ஞானத்தை ஏற்க, உயிருக்கு உடல் வேண்டும்; உலகமும் வேண்டும்.

கனிந்து பெருகுகின்றது, கந்தப் பெருமான் கருணை வெள்ளம். சுத்தமாயை சுழல்கிறது; கலை முதலிய தத்துவங்கள் வெளியாகின்றன;

தாழ்விலுயிர் வீழ்பட் டுழ்வினைவி டாமற்
சாவதன்மு னேவற் கொண்டி டாயோ.

ஒன்று கூடுகின்றன; உடல்கள் பல உண்டாகின்றன; உடம்புகளுள் உயிர்கள் புகுகின்றன; அசுத்த மாயா புவனத்தின் மேல் அமர்கின்றன.

உலகம், உடல் முதலிய உறவு கொண்டிருந்தும், அவைகளைப் பற்றுவதில்லை. பரமன் அருள்பெற வந்த உடல் இந்த உடல் என்பது, அந்த உயிர்களின் அழுத்தமான எண்ணம். அதற்கேற்ப, பரஞானம் வழங்குகின்றான் பரன். அதனில் பதிந்து, அமல இன்பத்தை ஆன்மாக்கள் அடைகின்றன. இந்த விஞ்ஞானத்தால் மலமகலும் உயிர்கள், விஞ்ஞான அகலர் எனப்பெறுவர்,

இருமல உயிர்கள்

ஆணவம் உண்டு; கன்மம் உண்டு; இந்த இருமலமும் உடைய உயிர்கள் சில. அந்த இரண்டும் அகலும் பக்குவம் அமையும், அந் நிலைக்கேற்ப, அசுத்த மாயை சுழல்கிறது. சுழற்சியி லிருந்து, சில நுட்ப தத்துவங்கள் வெளியாகின்றன; ஒன்று கூடுகின்றன; உடல்களாக உருக்கொள்கின்றன; அவைகளில் ஆன்மாக்கள் குடிபுகுகின்றன; அசுத்த மாயையின் நடுவில் அமர்கின்றன.

பிரளய காலம் பிறக்கின்றது. உலகம் அழிகின்றது. முருகன் முன்னிற்கின்றான். அமல தரிசனத்தால், இருமலமும் அகல்கின்றன. பிரளயத்தின் பின், இவர்கட்குப் பிறப்பில்லை. இதனால், இவர்கள் பிரளய அகலர் எனப்பெறுவர். பிறப்பு நீங்க, இந்த உயிர்கள் பெறுவது பேரின்பம்.

மும்மல உயிர்கள்

ஆணவம், கன்மம், மாயை என்று அடர்ந்த மலங்கள் மூன்று. அவைகளில் உறவு கொண்ட ஆன்மாக்கள் பலர்.

கருணை வாரிதியே இரு நாயகி கணவனே
உன தாளிணை மாமலர் தருவாயே.

அசைகிறது அசுத்த மாயை. அதனிலிருந்து வெளிப்பட்ட உடல்கள் பல. அவைகளுள் புகுந்த உயிர்கள், பிரகிருதி மாயையில் தங்கி, அல்லல் பெரிதும் அடைகின்றன.

பிரளயத்தில் உடலையிழக்கும்; ஒடுங்கிக் கிடக்கும்; மீட்டும் உலகம் உதிக்கும்; தோன்றிய உலகில், தானும் தோன்றும்; இப்படியே பிறப்பிறப்பில் உழலும். மும்மலத் தொடர்பும், இறப்பும் பிறப்பும், இன்பமும் துன்பமும் இடையறு திருத்தலின், இவர்கள் சகலர் எனப் பெயர் பெறுவர்.

இருவினை ஒப்பு

நல்வினை தீவினைகளைச் செய்து செய்து, அவைகளால் பிறந்து பிறந்து, இன்ப துன்பங்களில் விழுந்து எழுந்து, சலிப்படைந்து, இறுதியில் இன்பம் துன்பம் இரண்டையும் ஒன்றாக எண்ண ஒரு காலம் வரும். இதனால், நான் எனும் முனைப்பு ஒழியும்.

மலபரி பாகம்

விருப்பும் வெறுப்பும் இல்லை. இந் நிலையில், அருட் சத்தி சிறிது ஒளிவிடும். உடனே ஆணவம் கால் பங்கு அகலும்; இதை மந்ததர சத்திநிபாதம் என்பர்.

அதன்மேல், அருட்சத்தி இன்னும் சிறிது பெருகி ஒளிரும்; அந் நிலையில், ஆணவம் அரைப் பங்கு அகலும். இது, மந்த சத்திநிபாத நிலை.

அதன்பின், அருளொளி மேலும் சிறிது பெருகி நிற்கும். அவ்வளவில், முக்கால் பங்கு ஆணவம் முடிவுறும்; இது, தீவிர சத்திநிபாதம் எனப் பெறும்.

கலைகொடு பலதுன்பமும் அகலிட நின்
கழலிணை கருதும் படி பாராய்.

அதற்குப் பிறகு, ஓங்கும் அருள் விளக்கம் முழுதாகி ஒளிரும்; அதே அமயம், ஆணவம் முழுதும் அகலும்; இதைத் தீவிரதர சத்திநிபாதம் என்பர். (மலபரிபாகம்-ஆணவ மல ஆற்றல் அடங்கல்; சத்தி-அருள்; நிபாதம்-தங்கல்.) விஞ்ஞானகலரும், பிரளயாகலரும், பிரகிருதி மாயையில் தங்காமையால், அவர்கட்கு மந்ததர மந்த நிலையில்லை. சகலர்மட்டும் நால்வகை சத்திநி பாதமும் பெறுவதற்கு உரியவர்.

தீட்சை

சத்திநிபாத நிலைக்கேற்ப, உத்தம குரவன் ஒருவன் வருகிறான்; உள்பொருளில் உளம் பதிக்கின்றான்; பந்தம் நீக்கும் உணர்வொடு பார்க்கின்றான்; அந்த குருமுகமாகி, சகலரை உய்யக்கொள்கிறான் சண்முகன். இது சட்சு தீட்சை யெனப்பெறும்.

உளத்துள் உணர்வைப் பாய்ச்சுவன்; அவ்வழி, ஆன்ம அறிவில் சிவத்தன்மை அமையச் செய்வன்; இது, மானத தீட்சை.

உலகம், உயிர், இறையெனும் முப்பொருள் இயல்பையும், அருள் நிழல் கலப்பையும், நூல் வழியாகப் போதிப்பன்; இது சாத்திர தீட்சை.

சமய ஒழுக்கம் சாரும் ஆற்றல், சாதனங்களை மேற்கொள்ளும் அறிவு எனும் இரண்டு மிலாதவர்; வயதின் மூத்தோர்; மங்கையர்; சிற்றின்பப் பிரியர்;நோயினர் முதலினோர், மல பரிபாக சிந்தனைய ராயின், அவர்கட்கு மூலம் இல்லா மந்திரத்தை மட்டும் அருள்வன்; இது, நிர்ப்பீஜ தீட்சை.

கலைகளும் வருமுன் குலவின கலையும்
கழல் தொழு மியல்தந்து அருள்வாயே.

மந்ததரனை, நீ சரியைப் பணிசெய் என்று, அவனுக்கு சமய தீட்சை யருள்வன்.

மந்தனை, நீ கிரியைப் பணிசெய் என்று, சமயம், விசேடம் எனும் இரு தீட்சை யருள்வன்; தீவிரனை, நீ யோகம் கொள் என்று இரு தீட்சையும் நிகழ்த்துவன்.

தீவிரதரனை, நீ பாசத்தை யகன்று நில் என்று, ஞானத்திற்குரிய அவனுக்கு, நிர்வாண தீட்சை செய்வன்.

உயிர்களின் பக்குவ அபக்குவத்திற் கேற்ப, ஞான கிரியா தீட்சைகளை செய்கிறவன் சத்குரு; குருவுள், அத்துவா உருவாக ஒளிவிடுகிறான் குமர குருபரன்; என்ன வியப்பு!

ஐந்து கலைகள்

உயிர்களை உய்யக் கொள்ள எளிது எழுகிற திருவருள், கலை வடிவம் கொள்கிறது.

உயிர்கட்கு விடுதலை யளிக்கும் பொழுது, நிவர்த்தி கலையாகி நிற்கிறது.

நேர்ந்த விடுதலையை நிலைப்படுத்தும் பொழுது, பிரதிட்டா கலை யென்று பெயர் பெறுகிறது.

உண்மைப் பொருளை உணர்த்தும் பொழுது, வித்யா கலையாக விளங்குகிறது.

உணர்ந்த பொருளில் ஒடுக்கும் பொழுது, சாந்தி கலை யென்று சார்கிறது.

அடங்கிய உயிர், அமைதி பெற்றுளோம் எனும் அறிவைக் கடந்து அமையும்பொழுது, சாந்தியாதீத கலை என்று தழைத்திருக்கின்றது.

கருத்தா லெனைக்குத் திருந்தா வவித்துக்
கலைப் போதகத்தைப் புகல்வாயே.

பொருள் தோற்றம்

மேலுரைத்த ஐந்து கலைகளும், அருள் எனும் சுத்த மாயையி லிருந்து தோன்றியன. அக்கலைகளிலிருந்து மண்முதல் நாதமீறாக 36 தத்துவங்கள் வெளிப்படும். தத்துவங்களிலிருந்து, 224 புவனங்கள் வெளியாகின்றன; புவனங்களின் அணுத்திரள் ஒலியிலிருந்து, அகர முதலென உரைசெய் ஐம்பத்தொ ரக்கரங்கள் வெளியாகின்றன.

எழுத்துகளின் கூட்டுறவால், 81 பதங்கள் பிறக்கின்றன. பதங்களின் கூட்டுறவால், 11 மந்திரங்கள் உதயஞ் செய்கின்றன.

தோன்றிய இவைகள், தோன்றிய முறைப்படி மந்திரம் பதத்திலடங்கும்; பதம் எழுத்தில் அடங்கும்; எழுத்து புவனத்தில் ஒடுங்கும்; புவனம் தத்துவத்தில் ஒடுங்கும்; தத்துவம் கலையில் ஒடுங்கும்; கலை திருவருட் சத்தியிலொடுங்கும்; சத்தி இறைவனில் அடங்குவள்.

நினைவெல்லாம் மந்திர வடிவம்; சொல் எல்லாம் அந்த மந்திர உருவங்கள்.

நினைவும் சொல்லும் தூயதாயின், மந்திரங்களில் தெய்வீகம் விளங்கும்; அதற்குரிய பயனைச் செய்யும்; தீயதேல், அந்த மந்திரங்களில் பாவ இருள் படரும் பயன் அந்தோ! சொல்லவும் நாக்கூசுகின்றது.

இவைகளை நினைப்பூட்டுகின்றான், குரவனி லிருக்கும் குருபரன். ஆணவம் பிரதிபந்தம்: கன்மம் அநுபந்தம்; மாயை சம்பந்தம்; இவைகள் உன் அறிவை மறைத்தன; ஓயாமல் வினைப் பயனை ஊட்டின; உனது வியாபகத்தைத் தடுத்தன; இதை உணர்க என்கிறான், மேலும் அந்த குருநாதன்.

எரிவாய் நரகிற் புகுதாபடிக்கு
இருபாத மெனக்கு அருள்வாயே.

ஆணவ இருளும், அறிந்தோ அறியாமலோ வினையும் வினைகளும், ஞான சக்தியால் அழியும்; முன் செய்து கட்டிய மூட்டையான சஞ்சிதமும், அதற்கு ஆதாரமான மாயையின் செயலும், கிரியா சக்தியால் ஒழியும். இன்றைய அநுபவத்தி லிருக்கும் பிராரத்துவம், அநுபவித்த பின் அகலும் என்றும் விளம்புகின்றான் அந்த விமல குரு.

கன்மத்தின் பயனை அநுபவித்துக் கழிக்கும் காலத்தில், அதிகரிக்கிறது அயர்ச்சி. அமைதியை விழைகிறது ஆன்மா. அந்த விழைவு, மல ஆற்றலைச் சிறிது சிறிதாக மாய்க்கிறது.

இந் நிலையில்தான், எதிருள குருநாதன் அத்துவாக்களை அருள்கின்றான். தொடர்ந்த மந்திர ஜபத்தில், அந்த மந்திரங்களில் அமைந்த பதங்களை யறியும் உயிர்; அதன் மேல் எழுத்துக்களை உணரும்; எழுத்தின் ஒலியை உணரும்; ஒலி உலகில் வியாபித்தலை நினைக்கும்; உலகம், தத்துவங்களின் சேர்க்கை யென்பதைத் தெரிந்துகொளும்; தத்துவ ஆய்வு செய்யும்; அவைகள் கலைகளில் ஒடுங்கலையும், கலைகள் அருளில் அடங்கலையும் அறியும்;

"ஆறு அத்துவாவும், அண்டத்து ஆர்ந்த
அத்துவாக்களும் முன்
கூறத்தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து"

உடலும் உலகும் உதவியுளன் என்று உணரும்;

"குருபரனென்றோர் திருப்பேர்கொண்டு-திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி, உடல் அறுபத்தெட்டும், நிலம்
ஏழும், அத்துவாக்கள் இருமூன்றும்— பாழாக
ஆணவ மான படலங் கிழித்தழிவில்

நானுப வாத மேலாக ஆக
நாடோறும் வாடி மயங்கலாமோ.

காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி".

கந்தப் பரமன் செயும் கருணைத் திறத்தை நினைந்து நெஞ்சம் நெகிழும், அந்தஜீவன்

மந்திரங்களைப் பிழைபட உச்சரித்தல்; பதங்களைத் தகுதியிலாது பிரித்தல்; எழுத்துக்களின் ஒலி அளவையை உணராமல் ஒலித்தல், புவனதேவதையை நிந்தித்தல், கருவி கரணங்களான தத்துவங்களால் தீயவழிபடர்தல், ஐந்து கலைகட்கும் உரிய ஐந்து சத்திகளை ஆராதியாமை முதலியன பாவமென அறிந்து, புண்ணிய நெறியில் அவைகளோடு உறவாடி, அவ்விரு வினைகளால் உடல்பல எடுத்து, இன்ப துன்பங்களை சமமாக நினைத்து, மல ஆற்றல் குன்றி, அருள் விளக்கம் நேர்ந்த ஆன்மா, உவகையுடன் வந்துதவிய குருபரனை சிந்தித்து உணரும்.

உதிரம், என்பு, தசை, நிணம், நரம்பு, தோல், உரோமம் முதலிய எழுவகைத் தாதுக்கள், உடலில் உறைபவை. இந்த உடல், ஊரும் பேரும் உறவும் கொள்வது. உடலில் குடியிருப்பவர்கள் உயிர்கள்.

கை கொடுத்து உயிர்களைக் கரையேற்ற, ஊர் பேர் குணம் குறியொன்றுமில்லா அருள் முதல்வன், ஊரும் பேருமான உருவம் கொள்கிறான். அருளிலிருந்து வந்த திருவுருவம் அது. ஆதலின், அத்திருவுருவத்தில், தாங்க முடியாத சொல்லுருவமான மந்திரங்கள் 11-ம் உதிரமாகி உறைகின்றன; 81 பதங்கள் நரம்புகளாகி யிருக்கின்றன; எழுத்துகள் 51-ம், மேல் தோலாக மேவுகின்றன. 224 புவனங்களும், உரோமங்களாகி யுள்ளன. தத்துவங்கள் 36-ம் என்பு, தசை, நிணம்; கலைகள் 5-ம் அவயவங்கள். இங்ஙனம்

முந்தீந் முதலுந் மூவரான தேவர்ந்
அத்த்புர மும்முலே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

அத்துவாக்கள் ஆறுமான திருமேனிதாங்கி, நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றான் நிமலன்.

வெண்ணீர், செந்நீர், கண்ணீர், மலநீர், சிழ்நீர் மயமான உடலில் குடியிருக்கும் உயிர், இந்த அற்புதத் திருவுருவைப் பலகாலம் உணர்ந்து பயின்றதன் பயனாக, தரிசிக்கும் பேறு பெறுகிறது. இதோ பாருங்கள் ஆனந்தம் மிக்க அந்த உயிர், உருகிய உளத்தொடு பரனைநோக்கிப்பாடுவதை

"மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
ஒத்த புவனத்து உருவே உரோமமாத்
தத்துவங்களே சுத்த தாதுவா—வைத்த
கலையே அவயவமாக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமா நின்றோய்"

[சோரி-உதிரம், மாமுடி-சிறந்த நரம்புகள். தொந்தமுறும்-தொடர்புடைய, வன்னம்-எழுத்துகள். தொக்கு-தோல், பந்தனையால்-கட்டுக்கோப்பாக. சுத்த தாதுவா (உதிரம், நரம்பு, தோல், உரோமம் முதலியன நீங்கலாக உள்ள) என்பு, நிணம், தசை முதலியனவாக. அத்துவா—வழி.]

இந்த மந்திர முதலிய ஆறு வழிகளும், அமலனை யடையும் வழிகாட்டின. அதன் மூலம் வழி தெரிந்து வந்த உயிர்கள், வழியா யிருந்த அந்த ஆறுமே ஆறுமுகத் திருவுருவம் என்பதை யறிந்தபின், எத்துணை யின்பங் கொண்டனவோ! அறிவார்கள் யாரே! என்றெல்லாம் எண்ணிய புண்ணியம் நண்ணிய முனிவரர் குமர குருபரர். அவர் பாடிய இந்த அடிகளை, இன்று நாம் எண்ணுகின்ற

கைவிளக்குக் கொண்டு கடலில் வீழ்வார் போல
மெய் விளக்குன்னுள்ளிருக்க வீழ்வதேன் புல்லறிவே·

போதே, நம்மை யறியாமல் கைகள் கூப்புகின்றன. உருகுகின்றது உள்ளம். இன்ப நீரைச் சிந்துகின்றன கண்கள். சிவம் மிகுந்து, முருகா முருகா என்கிறது நம் வாய்.

இதுதானே! இன்னுங் கேளுங்கள் என்று, அருள் விலாசமான முருகனது எண்வகை யுருவும், எண் வகைத் தவமும் நயனுற நவிலும் அற்புதப் பகுதியை, அடுத்த இதழில் காண்பம்!

திருக்கழுக்குன்றத்தின் மாட்சி

இளவழகனார்

XI கழுகு

110. 'கழுக்குன்றம்' என்னும் பெயருக்கேற்றபடி இன்றும் அது கழுகுகள் வட்டமிடுங்குன்றமாய் உள்ளது; வேறு தளிகளிற் பல தம்பெயருக்கேற்றபடி நிகழ்ச்சிகள் இன்றுகாறும் நிகழப் பெறுவதில்லை.

111. கழுகுகள் குன்றமாய் இருப்பதனால் யார்க்கும் எதற்கும் தீமையோ, தூய்மையின்மையோ, அச்சமோ காணப்படுவதில்லை. அதற்குவேறாக, கழுகுகள் அத்தெய்வீகத் திருமலையில் மென்மையும் கண்ணியமும் உயர்வும், பெருமித நடையும், உணவு மாறுதலும் உற்றிருக்கின்றன.

112. மலர்களிற் சிறந்த தாமரைமலரை 'மலர்' என்னும் பொதுப் பெயரே குறிப்பதுபோல், பட்சிகளில் அரசாகிய கழுகையும் 'பட்சி' என்னும் பொதுப் பெயரே குறிக்குமென்பதைப் 'பட்சி தீர்த்தம்' என்னும்

பொய்யான கல்விகற்றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல்
மெய்யான ஞான கல்வி விரும்புவாய் கன்மனமே.

பெயர் வழக்கால் திருக்கழுக் குன்றம் உணர்த்துகின் றது. பறவையரசாகிய கழுகுக்கு அருள் புரியுங் குன்றமாய் அது திகழ்கின்றது

113. நாடோறும் நண்பகலில் இரண்டு கழுகுகள் மலையுச்சி யில் திருக்கோவிலுக் கருகில் இணைந்து வந்து திரு வமுது உண்டு செல்கின்றன. ஒவ்வொரு நாளும் பலர் அதனைக்கண்டு வியக்கின்றனர். உலகின் பல் வேறு நாட்டவரும் இங்கு வந்து இவ்வருஞ் செயலைக் கண்டு இது, எவ்வாறு நிகழ்கின்றதென்று அறிவா ராய்ச்சி செய்து திணறுகின்றனர். இக்காலத் தெய் வக் காட்சியாய் இது அனைவரையும் உள்ளுருகச் செய்கின்றது. மன உணர்வும் அருளுணர்வும் இத னால் வீறிட்டெழுகின்றன கழுகுகள் வரும்போது நூற்றுக்கணக்காகவும் மக்கள் அங்கே திரண்டிருந்து காண்பதுண்டு. கழுகுகள் அவர்களிடையே பெரு மித நடையுடன் அசைந்து நடந்து வந்து அமுதுண்டு செல்லும். நெய்யுடன் சர்க்கரைப் பொங்கல் வழங் கப்படும். கழுகுகள் கிண்ணங்களில் உள்ளதை உண் ணும்; பட்சிபண்டாரம், திருவமுதைத் தம் கையில் வைத்துக்கொண்டும ஊட்டுவார். கழுகுகள் ஆர அமர இருந்தும் உண்ணும். இது, திருக்கழுக் குன் றத்துக்கே ஒரு தனிக் கண்காட்சியாய் விளங்கு கின்றது.

114. ஊன் தின்னும் இயல்புடைய கழுகுகளும் இத் தெய் வத் திருமலையில் தம் இயல்பு திருந்தி ஊன் உண் ணும் சைவப்பட்சிகளாய்ச் சிறந்து, இறைவனை வலம்

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே—அதைப் பற்று தறுத்துவிடு தாண்டவக்கோனே.

வந்து வழிபட்டுச் செல்லும் அருஞ்செயலை எண்ணி எண்ணி வியவாதார் இல்லை. அதுபோல், 'நாமும் திருக்கழுக் குன்றத்துக்கு வந்ததன் அடையாளமாக இப்பட்சிகளைக் கண்டேனும் ஊன் உண்ணுதலை விடுத்து நாளுஞ்சைவ உணவினராய் மாறித் தூய்மை யுடன் இறைவழிபாடு செய்யலாமே' என்னும் எண்ணமும், ஊனுண்பாரில் நன்மக்களாயுள்ளார்க்குத் தோன்றுவதுண்டு.

115. சில நாட்கள் திருக்கழுக் குன்றத்தில் தங்கி, விடியற் காலம் சங்கு தீர்த்தத்தில் நீராடி ஈர உடையுடன் பொழுது புலர்வதற்குள் மலைவலம் வந்து, பகலில் மலையுச்சியில் இறைவழி பாட்டுடன் பட்சிக் காட்சி கண்டு தூய உணவினராய் மாறி, பத்திய உணவு உண்டு அகமும் புறமுந்திருந்துவோர் பலர்.

116. திருக்கழுக்குன்றம் இவ்வாறு 'உணவுத்திருத்'தத் துக்கு உரிய இடம். மேலும், கழுகுகள் தம் கொலை களவுத் தன்மைகள் மாறி, வழிபாட்டுப் பண்பு பெறுதலின் அவற்றைக் கண்டேனும் மாந்தர் உணர் வுந்திருந்துதற் குரியாாகலின், இது, 'உணர்வுத் திருத்தத்'திற்குரிய இடமுமாம்

XII பொது

117. 'திருக்கழுக்குன்றம்' என்னும் பெயரில் 'திரு' என் னும் அடைமொழிசேர்ந்தே வழங்குதல் ஒரு சிறப்பு! பிரிந்து 'கழுக்குன்றம்' என்று மட்டும் பெரும்பாலும் வழங்குவதில்லை. 'திரு' என்பது, இங்குத் தெய்வத்

ஓடாமலோடி யுலகைவலம் வந்து சுற்றித்
தேடாமல் என்னிடமாய் தெரிசிப்பதெக்காலம்.

தன்மையை உணர்த்தும். வழக்கில், வேறு தளிகளில், இச்சிறப்பு மொழி பிரிந்து வழங்குதலைக் காண்கின்றோம்.

118. மலைக் கோவிலில் சிறப்புடையது இறைவன் திருமுன்னிலை; தாழக்கோவிலில் சிறப்புடையது அம்மன் திருமுன்னிலை; அம்மை, பருப் பொருளுடும் விரவி உலகியல் நடைமுறை அமைப்பவளாதலின், தாழத் திருக்கோவிலில் சிறப்புறுகின்றாள். இறைவன் நுண்ணியல் நிறைந்து கடந்த மேல் நிலை அமைந்தவனாதலின் மலையுச்சிக் கோவிலில் விளக்க முறுகின்றனன்.

119. சங்கு தீர்த்தத்தில் நீராடுதலால் பரு உடம்பு தூய்மையாம். விடியற்காலம் அமைதியாக மலைவலம் வந்து தூயமூலிகைக் காற்றிலும் சாற்றிலும் படிதலால் மன உடம்பு தூய்மையாகும்; மலைமேல் படி ஏறிச் செல்லுதலால் அறிவுடம்பு தூய்மையாம்; உச்சியில் திருக்கோவிலுட் சென்று சுற்று மண்டபத்தில் வலம் வருதலால் அருளுடம்பு கடக்கலாம்; பின்னர் இறையுருக் காட்சி காணலால், மெய்ந்நிலை (இறை நிலை) கூடலாம். திருக்கழுக்குன்றத்தின் வழிபாட்டுப் பெரும்பயன் இது. ஐவகை உடம்புங் கடக்கும் அருமையை எளிமையாக்கும் பெருமை அமைந்தது, திருக்கழுக்குன்றம்!

120. 'வேதாசலம்' 'வேதகிரி' 'திரிபுரம்' 'திரிபுரசுந்தரி' முதலிய பெயர்களை, பக்கங்களில் உள்ளவர்கள் தம் மக்களுக்கு இடுதல் வழக்கமாக உள்ளது. இது, இத் திருப்பதியின்பால் அவர்களுக்கு உள்ள அன்பையும்

அண்டபிண்டமெல்லாம் அணுவுக்கணு வாய்நீ
கொண்டவடிவின் குறிப்பறியேன் பூரணமே.

மதிப்பையும் புலப்படுத்தும். திருக்கழுக்குன்றம் இங்ஙனம் பலர் உள்ளத்தைக் கவர்ந்த சிறப்புடையது!

121. சமயக்குரவர் நால்வரேயன்றிப் பட்டினத்தார், தாயுமானர், அருணகிரியார் முதலிய பேரருட் பெருமக்களும் திருக்கழுக்குன்றத்தைப் பரவிப் பாடல் அருளிச்செய்திருக்கின்றனர். இங்ஙனம் பேரருட் குரவர் பலர் பாடலும் ஒருங்கே பெற்றுத் திகழும் திருப்பதி, திருக்கழுகுன்றேயாம். அந்தகக் கவி வீரராகவர் முதலிய பிறவிக் கவிஞரும் இதனைப் போற்றியிருத்தல் நினைவு கூரற்பாலது.

122. ஓர் ஆண்டில் ஆவணி முதல் தை மாதம் வரையில் ஆறு மாதங்கள் நோன்பு மாதங்கள் எனப்படும். அவை முறையே மூத்த பிள்ளையார், அம்மை, இளைய பிள்ளையார், சிவபிரான், திருமால், கதிரவன் என்பாரைப் பற்றிய அறுவகைச் சமயங்களுக்கும் உரியவை. இந்த ஆறு சமயவகையும் சைவசமயத்தின் உட்பிரிவுகளே. சைவம் என்பது சமயங்களுள் ஒன்றாயும், சமயங்களின் தாயாயும் திகழ்வது. ஆதலால் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகவும் விளங்கும் அது சிவத்தின் தொடர்புடையது. ஆறு சமயங்களுக்குரிய ஆறு மாதங்களுள் சிவசமயத்துக்குக் கார்த்திகை மாதம் உரியது. கார்த்திகை மாதம் வீறுமிக்கது. சைவசமயம் சிவபெருமானை ஒளிவண்ணத்தில் வணங்கும் சிறப்புடையதாதலின், மிகப் பழைய காலம் முதல் கார்த்திகை மாதத்தில் பேரொளி விழா நம் நாட்டில் நடைபெற்று வருகின்றது

மண்காட்டிப் பொன்காட்டி மாயவிருள் காட்டி
அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே.

"......................காணாதே போதியோ பூம்பாவாய்" என்று திருஞானசம்பந்தரும் இதனைத் திருவாய் மலர்ந்து உருகினர். மாதங்களில் கார்த்திகை சிவபிரார்க்குச் சிறந்தமை போலவே, கிழமைகளில் திங்கள் கிழமை அவர்க்குச் சிறந்தது. கார்த்திகைச் செவ்வொளி வெண் திங்கள் வெள்ளொளியாய்க் குளிர்ந்தும் மிகுந்தும் மேன்மையுறுதலை அது குறிக்கும். இது தவச்சிறப்பில் அதாவது நோன் பொழுக்கத்தில் நிகழ்வது! சைவம், நோன்புச்சமயமே. "சிவத்தைப் பேணின் தவத்திற்கழகு" என்பர் ஔவையார். ஆகவே கார்த்திகைச் சோமவாரம் சைவர்கட்குச் சிறப்புடையது. திருக்கழுக்குன்றத்துக்குக் கார்த்திகைச் சோமவாரம ஆண்டு முழுவதிலும் மிகச் சிறந்த நாள்! கார்த்திகைச் சோமவாரங்களிற் பலர் அங்கேவந்து தங்கி உருக்கத்துடன் நோன்பெடுப்பர். கார்த்திகையில் கடைசி சோமவாரத்தில் மலைக் கோவிலில் ஆயிரத்தெட்டுச் சங்குகளால் இறைவற்குத் திருமுழுக்குச் சிறப்பாக நடைபெறும். திருக்கழுக்குன்றம், இதனால் சைவ மேன்மையும் நோன்புச் சிறப்பும் உடைய தென்பது தெரியப்படும்.

123. திங்கள் கிழமையை அடுத்த செவ்வாய்க்கிழமை மலைவலத்துக்குச் சிறந்ததாகலின், அந்நாளும் திருக்கழுக்குன்றத்துக்குச் சிறப்பு; செவ்வாய் இயல்பு மண்ணோடு இயைபுடையது! மலைமருந்து முதலிய மண் தன்மையும், மலைத் தன்மையும் பெறுவதற்குச் செவ்வாய்நாள் ஏற்றது. பலர் கார்த்திகை மாதம் முழுவ

பிணவாசமுற்ற பெருங்காய மெய்யென்று
பணவாசையாலே பதியிழந்து கெட்டேனே.

தும் திருக்கழுக்குன்றத்தில் தங்கியிருந்து, கிழமை தோறும் திங்கள் செவ்வாய்களில் நோன்பு நோற்று வருவர். அங்கே வந்து தங்கமுடியாதவர்கள், அந் நாட்களில் தாம் எங்கிருந்தாலும். திருக்கழுக்குன் றத்தின் நினைவாய், அந்நினைவில் உருக்கங்கொண்டு நோன்பு செய்வர்.

124. உடலுக்கு மருத்துவம் அளிப்பது முதல் உணர்வு யிருக்கு விடுதலை அளிக்கும்வரையில் திருக்கழுக் குன்றம் இவ்வாறு எல்லாப்பக்குவத்தார்க்கும் பயன் செய்யும் பொருள் கலை அருட்களஞ்சியத் திருப்பதி யாய்த் திகழ்கின்றது!

125. திருக்கழுக்குன்றம், பொதுவாகவே ஒரு நோன்புத் திருப்பதி (பிரார்த்தனை ஸ்தலம்). அதாவது பாவுக் கடன் செலுத்தும் (பிரார்த்தனை செலுத்தும்) திருப் பதி! மக்கட்பேறு, உடல் நலம் முதலிய விருப்பப் பேறு காரணமாகப் பாவுக்கடன் செய்வோரும் நாடு முழுதும் உண்டு. "வேண்டுவார் வேண்டுவதே ஈயும்" பெருமான் அவ்வவர்க் கேற்றபடி அருள் புரியுந்திரு முன்னிலையாய் விளங்குகின்றனன்.

ஆறுமுகமான பொருள் (4)

திருப்புகழ் சதுரர்

(சே. த. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.)

தேவர் குறையைத் தீர்க்கவே, தேவதேவன் ஐந்து முகத்தோடு அதோ முகமுந்தாங்கி ஆறுமுகமாகி ஆறுதீப் பொறிகளால் ஆறுமுகனைத் தந்தான் என்று ஸ்காந்த

என்னையே நானறிய விருவினையுமீடழித்து
தன்னையறியத் தலமெனக்குச் சொன்னாண்டி.

புராணம் கூறும். ஆதலின் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்துடன் அதோமுக மும் சேர்ந்தே ஆறுமுகர்க்கும் முகங்களாயின.

"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்காண்
ஆசிலா அவன் ஆறுமுகத்து உண்மையாலறிநீ
பேசின் ஈங்கவன் பிறிதலன்"
"ஆதலின் நமது சத்தி அறுமுகவனும் யாமும்
பேதகமன்றால், நம்போல் பிரிவிலன்"

(கந்த புராணம்)

சிவஞாரது ஐந்துமுக அமைப்பை ஒருவாறு சிந்திப்போம்.

(1) ஈசானம்: இது மேல் நோக்கிய முகம். இம் முகத்திலிருந்துதான் சகல வித்தைகளும் தோன்றின. "ஈசானஸ் ஸர்வ வித்யானாம்" என்ற வாக்கையும் நோக்குக. இது பராசத்தியில் பத்திலொரு கூறான சிவசாதாக்கியமும் சதாசிவ மூர்த்தியும் பொருந்திய முகமாகும்.

(2) தற்புருஷம்: இது கிழக்கு நோக்கிய முகம். இது கிரியாசக்தியில் பத்திலொரு கூறான கன்ம சாதாக்கியமும் ஈசானன் என்ற மூர்த்தியும் கூடியது.

(3) அகோரம்: இது தெற்கு நோக்கிய முகம். ஞானசக்தியில் பத்திலொரு கூறான கர்த்திரு சாதாக்கியமும் ஈசுரனென்னும் மூர்த்தியும் கூடியது.

(4) வாமதேவம்: இது வடக்கு நோக்கிய முகம். இது இச்சாசக்தியில் பத்திலொரு கூறான மூர்த்தி சாதாக்கியமும் பிரமீசனென்னும் மூர்த்தியும் கூடியது.

**கொண்டவர்கள் கொண்டதெல்லாம் கொள்ளாதார் கொள்ளுவரோ
விண்டவர்கள் கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ.**

(5) சத்தியோ சாதம்: இது மேற்கு நோக்கிய முகம் இது ஆதிசக்தியில் பத்திலொரு கூறான அமூர்த்தி சாதாக்கியமும் ஈசன் என்னும் மூர்த்தியும் கூடியது.

இனி, இவற்றோடு சிவனார் ஆறுமுகப் பரமனைத் தருதற்காக "அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம்" ஆன அதோ முகமும் கொண்டனர். அதோ முகம் என்பது கீழ்நோக்கிய முகம். இது அபேத சிவ சக்தியான சிற்சத்தியில் பத்திலொரு கூறான மஹாசாதாக்கியமும் மஹா சாதாக்கியர் என்னும் மூர்த்தியும் கூடியது.

புறமுகத்தில் காட்சியாவன ஐந்து முகங்களே. இவ்வுண்மையைச் சிவாலயங்களில் தீபாராதனையின் போது விளக்குவதை அன்பர்கள் ஊன்றிநோக்கவேண்டும். தூபம், ஏகாலாத்தி முதலியவற்றால் தொடங்கி வழிபட்டபின் ஐந்து தட்டுகளைவைத்து வழிபடுவது காணலாம். அவை சிவனாரது ஐந்து முகங்களையே குறிக்கும். கீழே சமமாக நான்கு தட்டுகளும் அவற்றின் இடையில் மேலாக ஒரு தட்டும் வைப்பர், மேலேவைத்த தட்டு ஈசான முகத்தையும், மற்றைய நான்கு தட்டுக்கள் நான்கு திசைக்கணுள்ள ஏனைய நான்கு முகங்களையும் குறிப்பன. இவற்றை எடுத்து ஆராதனை செய்யும்போதும் இவ்வைந்து முகங்கட்குரிய மந்திரங்களே ஓதப்படும். அதோ முகம் கீழ்நோக்கிய முகம். அது அகமுக நாட்ட அநுபூதிமான்கட்கே காட்சியாவது. ஆதலின் அதனை வெளிப்பட காட்டுவதில்லை.

எனவே சிவனாரது ஆறு முகங்களே முருகனது ஆறு முகங்களாயின. இறைவனது சர்வவியாபக நிலையை (omnicience) இம் முகங்கள் காட்டலாயின. தேவால

முன்னை வினையெல்லா முழுதுமறுத்தாண்டி
தன்னையறியவே தானொருத்தி யானேண்டி.

யங்களில் ஆறுமுகசுவாமி உற்சவம் நடைபெறும்போது இவ்வுண்மை நன்கு விளங்கும். மற்றைய மூர்த்திகட்குத் திருவிழா என்னில் மூர்த்திகளை முன்பக்கம் மாத்திரம் தரிசிக்கலாம். எங்கள் ஆறுமுகப் பெருமானை முன்னும் பின்னும் காணலாம். இருபுறமும் அலங்காரம், ஆராதனை அனைத்தும் காணலாம். நமக்குப் புண்ணியமிருந்தால் நான்கு திசைகளிலும், வானத்திலும், மண்ணிலும் ஆகிய ஆறு பக்கத்திலும் காணக்கூடும், இதனால் ஆறுமுகப் பரமனது திருமுகங்கள் நம்மை எல்லாத் திசைகளிலும் நோக்கி அருள் பொழிகின்றன என்று அறியலாம். அடியவர்கள் துயரமுறின் அங்கே அந்தத் திசையிலே ஆறுமுகம் காட்சி யளித்துதவும்.

"செங்கேழடுத்த சினவடிவேலும் திருமுகமும்....... குமரனென எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்தெதிர் நிற்பனே". (கந்தரலங்காரம்)

எனவே, ஆறுமுகம் சிவனார் முகங்களே என்பதும் அவற்றால் அறுமுகச் சிவமே ஐம்முகச் சிவமாம் என்பதும் விளங்கும் (அறுமுகன் — என்ற பெயர் ஐந்தெழுத்தாலும் ஐந்துமுகன் என்ற பெயர் ஆறெழுத்தாலும் அமைந்துள்ள அழகும் நோக்குக). அவை எல்லாத் திசைகளிலும் அமைந்துள்ளமையால் எத்திசைகளிலும் அப்பொருமானது வியாபகத்தன்மை விளக்குவதோடு, அவன் அறியாமல் நாம் எதையும் செய்ய இயலாது; நாம் இரகசியத்தில் செய்யும் பாவங்களும் இறைவன் பார்வையினின்று தப்ப வழியில்லை; ஆதலால், நம் ஒழுக்கம் காத்துக்கொள்ள இவ்

இருளை வெளிவிழுங்கி யேகவுருக்கொண்டாற் போல்
அருளை விழுங்குமிருளகன்று நிற்பதேக்காலம்.

விளம்பூரணனுக்கு ஆறுமுகங்கள் உண்டு என்ற எண்ணமே போதும், என்பதும் புலனாகின்றன.

"வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும் வஞ்சித்தோம் என்று மகிழன்மின்-வஞ்சித்த எங்குமுளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி அங்கங்கு லைவதறிவு" (குமரகுருபரர்) It is wisdom to quake and shudder at the thought that there is one unseen, who is omnipresent and sees you in secret. ஆறுமுகங்கள் சிவ சத்தி முகங்களாதலை அடுத்த இதழில் காண்போம்.

முருகனும் மகேசனும் ஒரு பொருள் எனாதவன்
முடிவுடை மகாபதம் பெறுவதிலை" (பாம்பனடிகள்.)

(பாம்பனடிகள்)

அருட் செல்வமும் பொருட் செல்வமும்

(அ. ராமமூர்த்தி)

"அழகான பங்களா; அதைச் சுற்றிலும் இயற்கை அழகு நிரம்பிய தோட்டம்; எட்டுத் திசையிலும் எதிரொலிப் பார்த்தவுடன் ஏனென்று கேட்க எண்ணிறந்த வேலையாட்கள்; அழகும் அன்பும் ஒருங்கே கொண்ட மனைவி; பாங்கியில் என் பெயரால் நிறையப் பணம்; வேளா வேளைக்கு விருப்பமான விதவிதமான உணவு—மற்றும் சுகமான கார் சவாரி! இவ்வளவும் எனக்கு இருக்கின்றன. ஆயினும் என் மனதில் நிம்மதியில்லை. நான் சுகத்தில் ஆழ்ந்திருப்பதாக உணர முடியவில்லை. சஞ்சலம் எப்

பொழுதும் என்னை விடமாட்டேனென்கிறதே! நான் என்ன செய்வேன்?'' என்று அங்கலாய்த்துக் கொண்டார் எனது நண்பர்.

இதைக் கேட்டதும் எனக்கு மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. இந்திர போகத்தில் ஆழ்ந்திருப்பதாக நான் கருதிக்கொண்டிருந்த எனது நண்பரா இப்படிச் சொல்லுகிறார்? என்று திகைத்தேன்.

எனக்குத் தெரிந்தவரையில் அவருக்கு எந்தவிதக் குறைவுமிருப்பதாகத் தோன்றவில்லை. அவருடைய சுக வாழ்க்கையைப் பற்றி மேலான கற்பனைக் கனவுகள் கண்டுகொண்டிருந்த எனக்கு, அவருடைய பேச்சு வியப்பை அளித்தது நியாயமேயல்லவா? என் மனம் அவருடைய இந்த மொழிகளைப் பின்பற்றி ஆராய்ச்சிப் பாதையில் சென்றது. அதன் விளைவே இந்தக் கட்டுரை.

சாதாரணமாக நாம் நமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகப் பல வழிகளிலும் பொருளீட்ட முயல்கிறோம், வருந்தி உழைக்கிறோம், சம்பாதிக்கிறோம். சம்பாதித்த பொருளின் மூலம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுகிறோம். இப்படியே நாம் நமது வாழ்நாள் பூராவும் நமது வயிற்றுக்காகவோ, அன்றி இதர சுகபோகங்களை அனுபவிப்பதற்காகவோ சலியாது உழைத்துக்கொண்டே போகிறோம்.

ஆனால் நமது தேவைகள் என்றாவது பூர்த்தியடைந்து ஒரு எல்லைக் கோட்டுடன் நின்று விடுகின்றனவா என்று நாம் யோசித்துப் பார்த்தோமானால் "இல்லை'' என்ற முடிவுக்குத்தான் வந்து சேருகிறோம்.

எங்குஞ்சுயப் பிரகாசம்-அன்பர் இன்பவிருதயத் திருந்திடும வாசன்
துங்கவடியவர் தாசன்-தன்னைத் துதிக்கிறபதவி யருளுவனீசன்.

இன்றைக்கு சாப்பாட்டுக்கு சம்பாதித்தால் போதும் என்று நினைத்துவந்த மனிதன் நாளடைவில் அவனுடைய தேவைகளைத் தானே அபிவிருத்தி செய்துகொள்கிறான் அன்னவஸ்திரத்திற்குக் குறைவில்லாத வருமானம் கிட்டினாலும்கூட அவன் திருப்தியடைவதில்லை. ஒவ்வொன்றாக புதிது புதிதாக எதிர்ப்படும் தேவைகளைத் தனக்கு இன்றி அமையாதவையாக ஸ்வீகரித்துக் கொண்டு அவற்றை அடைவதற்காகத் தனது சக்தியைச் செலவிடுகிறான். பொருளீட்டுவதற்காக அல்லும் பகலும் கவலைப்படுகிறான். இப்படியே தனது வாழ்நாள் முழுவதையும் செல்வத்தைச் சேகரிப்பதிலும், அதைப் பாதுகாப்பதிலும் செலவழித்து முடிவில் தானும் அழிந்து விடுகிறான். அவனுடைய அழிவுக்குப் பின்னர் அவன் அவ்வளவு பாடுபட்டுச் சேர்த்த பொருட் செல்வத்தால் அவன் என்ன பயனைப் பெறுகிறான் என்பதுதான் நமக்குத் தெரிந்த கதையாயிற்றே!

அப்படிச் சேகரிக்கும் அந்த செல்வத்தினால் அவன் உண்மையில் சுகமடைகிறானா? வாழ்க்கையில் அவனுடைய ஒவ்வொரு தேவையும் பூர்த்தியடையும்பொழுது உண்மையான திருப்தி அவனுக்கு ஏற்படுகிறதா? ஏற்படுமானால் எனது நண்பர் ஏன் அவ்விதம் கூறுகிறார்?

செல்வத்தினால்தான் நாம் நமது வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும். சுகவாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது என்பது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் அந்தச் செல்வத்தினால் நமக்கு நிலையான சுகம் கிடைக்கிறதா? ஆத்மார்த்தமான திருப்தி ஏற்படுகிறதா? மனம் சஞ்சலமற்று அமைதியை நாடுகிறதா? என்று

அஞ்ஞானம் விட்டே யருஞ்ஞானத்தொல்லை தொட்டு
மெஞ்ஞானவீடு பெற்று வெளிப்படுவ தெக்காலம்.

ஆராயப் புகுந்தால் ஏமாற்றமான பதிலே கிடைக்கிறது.

தோன்றுவது எதுவும் அழிவது திண்ணம். பொருட் செல்வம் என்பது தோன்றக்கூடிய ஒன்று. எனவே அது அழிந்தேயாக வேண்டும். அழியக்கூடிய ஒன்றினால் நமக்குக் கிடைப்பது உண்மையான சுகமல்ல. அந்த சுகம் நீடிப்பதில்லை. அதனால் மனிதன் திருப்தியடைவதில்லை. எனவே மனிதன் பொருட் செல்வத்தினால் **பாவனா மாத்திரமான** சுகத்தையே அடைகிறான்.

அப்படியானால் மனிதன் சம்பாதிக்க வேண்டாமா? பொருட் செல்வத்தைத் தேடவேண்டாமா? என்று நீங்கள் கேட்கலாம். அப்படிச் சொல்வது இக் கட்டுரையின் நோக்கமன்று.

மனிதன் சம்பாதிக்க வேண்டியதுதான். பொருளைச் சேகரிக்க வேண்டியதுதான். ஆனால் அவனுடைய சம்பாத்தியம்—அவன் தேடும் செல்வம்—அழியாததாக இருக்க வேண்டும். அவனுக்கு நிலையான—உண்மையான சுகத்தைக் கொடுப்பதாக இருக்கவேண்டும். அம்மாதிரி அழியாத செல்வம் என்று ஒன்று இருக்கிறதா?

ஆம்! அழியாத செல்வம் ஒன்று இருக்கிறது. அது தான் அருட் செல்வம். அச் செல்வம் மட்டும் நமக்குக் கிடைக்குமானால் பின்னர் நாம் அடையவேண்டுவது என்று ஒன்றுமில்லை.

அருட் செல்வம் என்பது யாது? அதை எப்படி அடைவது? எந்த சமயத்தில் அதை அடையமுடியும்? இவைகள் கேட்கப்பட வேண்டிய வினாக்கள்.

கருப்பபடுத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளுமுன்
உருப்படுத்தியாள உடம்ப[illegible] தேக்காலம்.

பொருட் செல்வத்தைப் போலவே அருட் செல்வத்தையும் தேடி வருந்தி உழைத்துத்தான் சம்பாதிக்க வேண்டும். அதற்கென குறிப்பிட்ட ஒரு காலமோ இடமோ அல்லது பேரமோ கிடையாது. அச் செல்வத்தைப் பெற எந்த நேரமும், எந்த இடமும் உதவி புரியும். தேடுவோனுடைய ஊக்கத்தையும் விடாமுயற்சியையும் பொறுத்தது அது. அச் செல்வத்தைப் பெற எல்லோருக்கும் உரிமையுண்டு.

நீங்கள் திரை கடல் ஓடி அருட் செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டியதில்லை. முதல் போட்டு வர்த்தகம் செய்ய வேண்டியதில்லை நஷ்டம் வருமோ என்று பயப்பட வேண்டியதில்லை. சரீராதி அவயவங்களை வருத்த வேண்டியதில்லை. அச் செல்வத்தைத் தேட நமது மனமே நிலைக்களனாக விளங்குகிறது. அதை நமக்குக் கொடுக்க எந்த நேரத்திலும் இறைவன் தயாராகவிருக்கிறான். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அவனை உள்ளன்புடன் நோக்க வேண்டியது ஒன்றுதான்!

உங்கள் மனதை முதலாகவைத்து, சரீரத்தையும் உலகையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டு, நிஷ்காம்யம் என்ற கடையில் இந்திரியங்கள் என்ற பணியாட்களை ஒழுங்குபடுத்தி அமைத்து, உங்கள் வியாபாரத்தை தீவிர ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும் ஆரம்பியுங்கள்! அருட் செல்வம் தானேவந்து குவியும்! இவ்வியாபாரத்தில் நிச்சயமாய் உங்களுக்கு நஷ்டமில்லை.

ஓதவெளிதோ ஒருவருணர் வெளிதோ
பேதமற வெங்கும் விளங்கும் பெருமையின் காண்;

'முருகன் வாழ்வு'
(புலவர் அரசு)

1. மலர்கின்ற பேரின்ப வாழ்வி லமைந்து
நலமொன்றி வாழ நயந்தால்—வலமார்
பொருப் பரங்கென் றுடுகின்ற புள்ளி மயிலோன்
திருப்பரங்குன் றுள்ளமே! சேர்

2. கொச்சை மொழிமக்கள் கோதையரென் றேயுருகும்
இச்சை யொழிய எமன்வருமுன்—விச்சை
இருப்பரங்கை கூப்பஇனிது வருஞ்செவ்வேள்
திருப்பரங்குன் றந்தனையே செப்பு.
(விச்சை இருப்பர்—ஞானநிதியர்

3. நினைவு கெடுமுன்னே நெஞ்சங் கலங்கி
மனைவி மகவு வருந்தி—இனையும்
இரங்கும் பரிசுறுமுன் எங்கோன் முருகன்
பரங்குன்றங் கண்ணாலே பார்

4. மாலிலங்கு பெண்டிரொடு மக்களெலாம் வாய்திறந்து
பாலிலங்கை கொண்டிறக்கப் பார்க்குமுன்—வேலைக்
கரங்கொண்ட செவ்வேளைக் கந்தனை வாழ்த்திப்
பரங்குன்றமென்றே பகர்

5. ஏலங் கமழ் குழலா ரிச்சையெலாம் பொய்யாகி
ஞாலங் கசந்தெமனார் நட்புறுமுன்—ஓலங்
கருச்சந்திப் பைபீக்காய் கந்தப்பா! என்று
திருச்செந்திற் சேவகன்றாள் சேர்

6. எண்ணமெலாம் பொய்யாகி ஏமன் வருவது தான்
திண்ணமெனச் சுற்றத்தார்செபபிடுமுன்-புண்ணியனும்
நீரலைவாய் வெம்புலத்தின் நெட்டறுக்குங் கந்தப்பன்
சீரலைவாய் என்றொருகாற் செப்பு.
(நீர் + அல் + ஐவாய் வெம்புலம்)

(தொடரும்)

THE DAY

'Well-begun is half done' is a trite saying. Even so the glory of the dawn indicates the quality of the coming day. The day is of two kinds. One is of the eternal (இறவா நாள்). The other is of the evanescent (பிறவா நாள்). In the view of the Tamil Saints, the life of man in this world is cast in a measure of days—a period; and unto each man according to his destiny the period of life gets fixed. The life of man is but a period over which the process of death is in progress culminating at the end of the last day of life so called. At birth man gets a fund of life-energy which is expended over the life-period and the exhaustion of life-energy marks the point of time man is supposed to be dead. In truth the death-process commences the moment life starts, and the period of life is but a slow process of death from day to day over the whole period of life.

It is the settled conviction of the Tamil Saints that every day that passes is not counted in the period of days settled by destiny. It is open to man to allow days to pass, which will only hasten man to his ultimate dissolution. It is also open to him to live days that do not exhaust any portion of the life-energy allotted to him—nay he can even add to the quantum of life-energy allotted to him at birth.

The days in life where life-energy has been expended are days of death, that is of partial death. Life is gone to the extent it is measurable by the tune of the day so spent. These are days of evanescence. The mind of man had got engaged over the day over the transient things of life in the material world. A day so told off is a day lost for ever, accounted as past. In fact death had consumed one day of the life-period. Such a day saint Appar has described as "பிறவா நாள்", the idea being that the day lost is a day that was not born at all—not a day that has added anything to life. The day of birth (பிறந்த நாள்) is really the day of the birth of fresh-life (இறவா நாள்) and not the day of death or loss of life or life-energy (பிறவா நாள்). The day that is not accounted in the period of life so called is of the eternal The days of birth are the days when there is added more and more of life energy. As the Lord-God is the very life of all living things, as he is the true storage of life-energy, the mind which dwells on the great qualities of God, which is engaged in the attunement with his divine nature, brings and secures for its possesser the man, more and more of life-energy. The day so spent goes to the credit side of life and not to the debit side of it. Now one can appreciate the song of Saint Appar who declared that the days

when the Lord has not been meditated upon, spoken about or sung about, are days that have never dawned to endure or profit, but days that have ticked off a part of our life period into death. The sages counsel that man must live to gather life energy and not to lose the life-energy the Maker gave him. Making allowances for other forces bearing on the question, let man live to live and to live from day to day. Let not man live only to die and to die.

Over ten stanzas Saint Appar sings of days described by him as "days unborn" as opposed to "days ineffaceable", (பிறவா நாள்) and (இறவா நாள்). The former are the days of the play of death, of the march of time whereby the present is submerged into the past. The latter represent days during which man never had a taste of death, during which the flow of time had been stopped for him, and the man is in instant touch with that entity which is the ever present and beyond time. One such stanza is an oft quoted one:

"அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர் கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

The sense of the song has been fully dealt with above.

The great *Manikkavachagar* contributes a dynamic thought when he describes himself—"பொய்ம்மையே பெருக்கி பொழுதினை சுருக்கும் புழுத்தலை புலையனேன் தனக்கும்". Truth is eternal and Truth is one and only one. He who contemplates on the one Truth, draws unto himself the quality of its Eternal Existence. He who revels in the desires and hatreds of the material changing world, plumps for Untruth and thereby shortens even the short life destined for him.

Saint *Siva Vakkyar* declares on oath that man can live in the spirit of eternal youth on one condition.

"மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே யெழுந்திருந்து நாலுகட்டு அறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்ரம்ம மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே."

The condition is that man should at the dawn of each day discharge his mind of all desires and hatreds and keep the pool of his life-blood free from the contamination of the feeling of separatism, that is he should, in touch with the Supreme, live in love for all.

It is interesting to note what *Saint Bharathiar* has sung of the living day and how to secure it. If a man dies during day and

does not learn to live it, he will of necessity be consumed by death one day or other. He declared that he felt that he was born with the dawn of the rising sun, with the sprouting leaf, with the budding flower, in the vastness of the sky and over the waves of the mighty ocean. The spirit of life and death is not of the body, but of the mind, and its reflection alone is felt in the material expression of the body of man.

—*THIRUPPUGAL MANI.*

527

“ எருதுயேறும் ஈசனும்
இயங்குசக்ர தரனையும்
வேறுகூறு பேசுவார்
வீழ்வர் வீவரகிலே ”

(சிவவாக்கியர்)

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
‘சத்வைத்யசாலை’ நஞ்சன்கூடு

யாவருக்கும் — I.D.L.21 ஸ்வாஸ்கோ — இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்ட்டோன் — ஹிருதய வலி, மயக்கம், தடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் — ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு — I.D.L.71 ப்ரமெலக்ஸ் — ரஜ, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு — பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் — ருது உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் — கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் — ஜீரண விருத்திக்கு

குழந்தைகளுக்கு — I.D.L.12 காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை
I.D.L.16 கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் — பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் — ஜீரண டானிக்

அவசிய தின உபயோகங்கள்

“நஞ்சன்கூடு பல்பொடி” I.D.L.6 (ரெடிகேட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் — உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் — அஜீரண, பித்த சமனி
‘பூனிகான்’ சுத்த தேன்

யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதறாஸ்.1

MILD SCENTED
அசோகா
ASOKA
ஊதுவத்தி
No. 1506
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.

Tel:—"FAITH' Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.